Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 3/2022 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கருப்புசாமி |
| Father's Name | – | மாரியப்பன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 04th June 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மயிலாபுரத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சாலை விபத்தில் இறந்துபோன அரிச்சந்திரன் எனது தம்பி. கடந்த 2019 ம் ஆண்டு எனது சகோதரர் பாறை மடையூர் கல்யாண மண்டபம் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது TVS XL Super மோதி காயம்பட்டு கோவை அரசு மருத்துவமனையில் கிசிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டு, நான் பார்க்க சென்றேன்.

மேற்படி விபத்து குறித்து அவரோடு இருந்த கண்ணன் மற்றும் மணிகண்டன் ஆகியோர் கூற கேட்டு அது குறித்து நான் மருத்துவமனைக்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். தற்போது என்முன் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்துமட்டும் **அ.சா.ஆ.1** ஆகும்.

பின்னர் என்னுடைய சகோதரர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறந்துவிட்டார். அவரது சடலத்தின் மீது போலிசார் பிரேத விசாரணை செய்தபோது நான் அடையாளம் காண்பித்து சாட்சியாக இருந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல, சுமாராக தெரியும். நான் புகாரினை கைப்பட எழுதி தரவில்லை, போலிசார் எழுதினார்கள் அதில் நான் கையொப்பம் இட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது தம்பி மது பிரியர் என்றால் சரிதான். எனது தம்பி மது அருந்திவிட்டு அது தொடர்பாக பிரச்சனை செய்து காவல்நிலையம் செல்வார் என்றால் சரிதான். எனது தம்பி மது அருந்திவிட்டு ஓடும் பேருந்தில் ஏறிஇறங்குவார் என்றால் சரிதான். மேற்படி விவரம் குறித்து நடத்துனர்கள் மற்றும் ஓட்டுநர்கள் காவல்நிலையத்தில் புகார் அளித்த விவரம் எனக்கு தெரியாது. புகாரை நான் அளிக்கவில்லையென்றாலும் போலிசார் எழுதியதில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

அரசுதரப்பு சாட்சி அனுசரியாத சாட்சியாக கருதுவதால் அரசுதரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.